## 2024.01.24 அன்று இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் எட்டப்பட்ட முடிவுகள்

### 01. இலங்கைக்கும் தாய்லாந்துக்கும் இடையிலான சுதந்திர வர்த்தக உடன்படிக்கையில் கையொப்பமிடல்

விநியோக இயலளவை விருத்தி செய்தல், ஏற்றுமதியை மையமாகக் கொண்ட வெளிநாட்டு முதலீடுகளை கவர்ந்திழுத்தல் மற்றும் இலங்கையில் பண்டங்கள் மற்றும் சேவைகளுக்கான சர்வதேச சந்தை அணுகல்களை விரிவாக்கம் செய்தல் போன்றன இலங்கையின் பொருளாதார விருத்தியில் கட்டாயமாகக் கடைப்பிடிக்க வேண்டிய மூலோபாயங்களாக அடையாளங் காணப்பட்டுள்ளன. அதற்கமைய, தென்கிழக்காசிய நாடுகளின் சங்கத்தில் பாரிய பொருளாதாரம் மற்றும் பாரிய வெளிப்புற முதலீட்டு அரசான தாய்லாந்துடன் சுதந்திர வர்த்தக ஒப்பந்தத்தை மேற்கொள்வதற்கான கலந்துரையாடல்களை மேற்கொள்வதற்காக அமைச்சரவையால் 2018.01.16 அன்று இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. கலந்துரையாடல் செயன்முறையில் தேசிய வர்த்தக கலந்துரையாடல் குழுவானது குறித்த அனைத்து உள்ளூர் தரப்பினர்களுடன் கருத்துக்கள் பகிர்ந்து கொள்ளப்பட்டுள்ளன. இலங்கை மற்றும் தாய்லாந்து தரப்பினர்களிடையேயான ஒன்பது கலந்துரையாடல் சுற்றுக்களின் பின்னர் தயாரிக்கப்பட்டுள்ள வர்த்தகம் மற்றும் முதலீடுகளை மேம்படுத்தல், உள்ளூர் சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளுக்கான இணக்கப்பாடுகள் மற்றும் அறிவுப் பகிர்வுக்கான வசதிப்படுத்தல்கள் உள்ளிட்ட முன்னுரை மற்றும் இணைப்புக்கள் உள்ளடங்கிய 14 அத்தியாயங்களுடன் கூடிய முழுமையான சுதந்திர வர்த்தக ஒப்பந்த வரைபுக்கு சட்டமா அதிபரின் ஒப்புதல் மற்றும் வெளிவிவகார அமைச்சின் உடன்பாடும் கிடைக்கப் பெற்றுள்ளது. அதற்கமைய, இலங்கைக்கும் தாய்லாந்துக்கும் இடையிலான உத்தேச வர்த்தக ஒப்பந்தத்தில் இருதரப்பினரும் கையொப்பமிடுவதற்காக கௌரவ ஜனாதிபதி அவர்கள் சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

### 02. ஜேர்மன் அபிவிருத்தி கூட்டு (GIZ) இனால் நடைமுறைப்படுத்தப்படும் ‘‘நிலைபெறுதகு நுகர்வு மற்றும் உற்பத்தி ஊக்குவிப்புக் கருத்திட்டத்தின்’’ கீழ் தொழிநுட்ப ஒத்துழைப்புக்களைப் பெற்றுக் கொள்ளல்

ஐக்கிய நாடுகள் சபையின் 12 ஆவது நிலைபெறுதகு அபிவிருத்திக் குறிக்கோளாக அடையாளங் காணப்பட்டுள்ள ‘‘நிலைபெறுதகு மற்றும் நுகர்வு முறைகளை உறுதிப்படுத்தல்’’ இன் கீழ் 07 ஆவது நிலைபெறுதகு அபிவிருத்தி இலக்காக ‘‘தேசிய கொள்கைகளின் முன்னுரிமைகளுக்கமைய நிலைபெறுதகு வகையிலான பெறுகை நடைமுறைகளை ஊக்குவித்தல்’’ உள்வாங்கப்பட்டுள்ளது. குறித்த இலக்கை அடைவதற்காக அரச பெறுகைச் செயன்முறைக்கு பசுமைக் கூறுகளை முறைசார்ந்த வகையிலும் போதியளவிலும் உள்ளீர்த்துக் கொள்வதற்காக உருவாக்கப்பட்டுள்ள தேசிய பசுமை பெறுகைக் கொள்கைக்கும், நம்பிக்கையான பசுமை உற்பத்திகள் மற்றும் சேவைகளை அடையாளங் காண்பதற்கு வசதிகளை வழங்குவதற்காகவும் மற்றும் சந்தையில் போலியான பசுமையாக்கங்களைக் குறைப்பதற்காக தயாரிக்கப்பட்டுள்ள சூழல் நேய பொதியிடல் தொடர்பான தேசிய சட்டகத்திற்கும் அமைச்சரவை இதற்கு முன்னர் அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. குறித்த கொள்கைகளுக்கமைய நடைமுறைப்படுத்துவதற்குத் திட்டமிடப்பட்டுள்ள வேலைத்திட்டங்களுக்காக ஜேர்மன் அபிவிருத்தி கூட்டு ஆசிய நாடுகளில் தற்போது நடைமுறைப்படுத்தியுள்ள ‘‘நிலைபெறுதகு நுகர்வு மற்றும் உற்பத்தி ஊக்குவிப்புக் கருத்திட்டத்தின்’’ கீழ் தொழிநுட்ப ஒத்துழைப்புக்களை வழங்குவதற்காக உடன்பாடு தெரிவிக்கப்பட்டுள்ளது. அதற்காக சுற்றாடல் அமைச்சு ஜேர்மன்

அபிவிருத்தி கூட்டு (GIZ) இற்குமிடையில் ஒப்பந்தமொன்றை மேற்கொள்வதற்காக சுற்றாடல் அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**03. தேசிய கறுவா ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிலையத்தை கறுவா அபிவிருத்தித் திணைக்களத்திற்கு ஒப்படைத்தல்**

2023.09.01 ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்கு வரும் வகையில் கறுவா அபிவிருத்தித் திணைக்களம் எனும் பெயரில் திணைக்களமொன்றை நிறுவுவதற்காக 2023.08.14 அன்று இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. தற்போது ஏற்றுமதி விவசாயத் திணைக்களத்தின் கீழ் இயங்கி வருகின்ற தேசிய கறுவா ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிலையத்தை புதிதாக தாபிக்கப்பட்டுள்ள கறுவா திணைக்களத்திற்கு ஒப்படைத்தல் பொருத்தமானதெனக் கண்டறியப்பட்டுள்ளது. அதற்கமைய, தேசிய கறுவா ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிலையத்தின் அனைத்து சொத்துக்கள் மற்றும் தேசிய கறுவா ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிலையத்தால் தற்போது நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் அனைத்துப் பணிகள் மற்றும் தத்துவங்களை கறுவா அபிவிருத்தித் திணைக்களத்திற்கு ஒப்படைப்பதற்காக விவசாய மற்றும் பெறுந்தோட்டத் துறை அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**04. இலங்கையின் சுகாதார அமைச்சு மற்றும் ஐக்கிய அமெரிக்காவின் Latter - day saints Charities அமைப்புக்கும் இடையிலான கூட்டு ஒப்பந்தம்**

முதுகெலும்பு பாதிக்கப்பட்ட நோயாளர்களுக்கு சக்கர நாற்காலிகளை வழங்குவதற்காக சுகாதார அமைச்சு மற்றும் ஐக்கிய அமெரிக்கவின் Latter day saints Charities அமைப்புக்கும் இடையில் மேற்கொள்ளப்பட்டுள்ள ஒப்பந்தத்தின் ஏற்பாடுகளுக்கமைய தற்போது சக்கர நாற்காலிகள், ஏனைய துணைக் கருவிகள் நன்கொடையாக இலங்கைக்கு கிடைக்கப் பெற்றுள்ளது. கடந்த காலங்களில் நிலவிய புற்றுநோய் மருந்துகளின் பற்றாக்குறையைக் கருத்தில் கொண்டு சுகாதார அமைச்சின் வேண்டுகோளுக்கமைய, பதின்மூன்று (13) வகையான மருந்துகள் தொகையை தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபையில் பதிவு செய்யப்பட்ட விநியோகத்தர்கள் மூலம் நன்கொடையாக இலங்கைக்கு வழங்குவதற்கு Latter - day saints Charities நிறுவனம் உடன்பாடு தெரிவித்துள்ளது. அதற்கமைய, அங்கீகரிக்கப்பட்டுள்ள நடவடிக்கை முறைகளைக் கையாண்டு குறித்த நன்கொடையைப் பெற்றுக் கொள்வதற்கு சுகாதார அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்துள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு தொடர் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக அமைச்சரவை அங்கீகாரம் வழங்குவதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**05. நுண்ணுயிரி எதிர்ப்பு தேசிய மூலோபாய சட்டகத்தை 2023 – 2028 (Antimicrobial Resistance National Strategy Framework) நடைமுறைப்படுத்துவதற்காக ஐக்கிய இராச்சிய நிதியத்தின் ஒத்துழைப்புக்களைப் பெற்றுக் கொள்ளல்**

மனிதகுலம் எதிர்கொண்டுள்ள முக்கிய 10 பொதுச் சுகாதார இடர்களில் நுண்ணுயிரி எதிர்ப்பு அடையாளங் காணப்பட்டுள்ளது. 2019 ஆம் ஆண்டில் உலக சுகாதார தாபனத்தின் மதிப்பீட்டின் பிரகாரம் நுண்ணுயிரி எதிர்ப்பு தாக்கங்களால் மருந்து எதிர்ப்பு பற்றீரியாக்கள் மூலம் வருடாந்தம் 1.27 மில்லியன் நேரடி இறப்புக்கள் இடம்பெறுவதாகவும், மருந்து எதிர்ப்பு பற்றீரியாக்களுடன் தொடர்புடைய இறப்புக்கள் வருடாந்தம் 4.95 மில்லியன் இடம்பெறுவதாகவும் மதிப்பீடு செய்துள்ளது. மேலும், நுண்ணுயிர் எதிர்ப்பு நாடுகளுக்கு குறிப்பிடத்தக்களவு பொருளாதாரச் செலவுகளை ஏற்படுத்துவதாகவும் உலக சுகாதார தாபனம் கண்டறிந்துள்ளது. இந்நிலையில் ஐக்கிய இராச்சியத்தின் சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு திணைக்களத்தால் முகாமைத்துவப்படுத்தப்படும் ஃப்ளமிங்க் நிதியத்தின் (Fleming Fund) வேலைத்திட்டத்தின் மூலம் 25 ஆபிரிக்கா மற்றும் ஆசிய நாடுகளுக்கு நுண்ணுயிர் எதிர்ப்பு தொடர்பாக செயற்படுவதற்காக ஒத்துழைப்பு வழங்கப்படுகின்றது. குறித்த முக்கிய வேலைத்திட்டத்தின் கீழ்

ஃப்ளமிங்க் நிதியத்தைப் (Fleming Fund) பெற்றுக்கொண்டு நுண்ணுயிரி எதிர்ப்பு தேசிய மூலோபாய சட்டகத்தை 2023 – 2028 நடைமுறைப்படுத்துவதற்காக தேவையான படிமுறைகளை மேற்கொள்வதற்காக சுகாதார அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

**06. செலாவணிப் பற்றுக் கட்டளைச் சட்டத்திற்கான திருத்தம்**

தற்போது நடைமுறையிலுள்ள 1927 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க செலாவணிப் பற்றுக் கட்டளைச் சட்டத்தின் ஒருசில ஏற்பாடுகள் கருத்து முரண்பாடுகளை ஏற்படுத்தியுள்ளதுடன், அதன் ஒருசில ஏற்பாடுகள் காலங்கடந்து போயுள்ளன. அதனால், பயன்படுத்தக் கூடிய சட்டபூர்வமான ஆவணங்கள் தொடர்பாகத் தெளிவூட்டுவதற்கு மேம்படுத்துவதற்கும் செலாவணிப் பற்றுக் கட்டளைச் சட்டத்தில் மேற்கொள்ளப்பட வேண்டிய திருத்தங்கள் தொடர்பான விதந்துரைகளைப் பெற்றுக் கொள்வதற்காக ஜனாதிபதி சட்டத்தரணி நிஹால் ஜயவர்த்தன அவர்களின் தலைமையில் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது. குறித்த குழுவால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள அறிக்கையில் உள்வாங்கப்பட்டுள்ள விதந்துரைகளின் அடிப்படையில் 1927 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க செலாவணிப் பற்று கட்டளைச் சட்டத்தைத் திருத்தம் செய்வதற்கான சட்டமூலமொன்றைத் தயாரிப்பதற்காக நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சராக கௌரவ ஜனாதிபதி அவர்கள் மற்றும் நீதி சிறைச்சாலை அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் அவர்களும் இணைந்து சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**07. 1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க குற்றவியல் வழக்குக் கோவை சட்டத்திருத்தம்**

சட்டத் தாமதங்களால் பெரும்பாலும் குற்றவாளிகளுக்கு அல்லது மேன்முறையீட்டாளர்களுக்கு அவர்களின் தண்டனைக் காலத்திற்கு மேலதிகமாக நீண்டகாலம் சிறைச்சாலையில் இருப்பதற்கு நேரிடுவது நியாயமற்றதென அடையாளங் காணப்பட்டதன் அடிப்படையில் குற்றவாளிகள்ஃமேன்முறையீட்டாளர்களை சிறையில் தடுத்து வைக்கப்பட வேண்டிய காலம், அவருடைய தண்டனை விதிப்பின் கீழ் சிறையில் தடுத்து வைக்கப்பட வேண்டிய காலத்தைக் குறைப்பது பற்றிக் கருத்தில் கொள்வதற்கு இயலுமாகும் வகையில் குற்றவியல் வழக்குக் கோவையின் 323(5) மற்றும் 333(5) பிரிவு திருத்தம் செய்வதற்காக 2023.02.20 திகதி இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. அதற்கமைய, சட்டவரைஞரால் சட்டமூலமொன்று தயாரிக்கப்பட்டுள்ளதுடன், அதற்காக சட்டமா அதிபரின் ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. குறித்த சட்டமூலத்தை வர்த்தமானியில் வெளியிடுவதற்கும், பின்னர் பாராளுமன்ற அங்கீகாரத்திற்காக சமர்ப்பிப்பதற்கும் நீதி சிறைச்சாலை அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் அவர்களும் இணைந்து சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**08. தண்டனைச் சட்டக் கோவைத் திருத்தம்**

தண்டனைச் சட்டக் கோவையில் வன்புணர்வுக் குற்றம் தொடர்பாக சட்டத்திருத்தம் செய்வதற்காகவும், வன்புணர்வு பற்றி சட்டத்தில் காணப்படுகின்ற குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்காக மற்றும் ஆண் பிள்ளைகளை வன்புணர்வு செய்தல் குற்றமுறைச் செயலாக உருவாக்குவதற்காகவும், தண்டனைச் சட்டக் கோவையில் அறிமுகப்படுத்துவதற்காக 2021.01.18 மற்றும் 2021.06.28 திகதிகளில் இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டங்களில் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. அதற்கமைய, சட்ட வரைஞரால் தயாரிக்கப்பட்டுள்ள சட்டமூலத்திற்கு சட்டமா அதிபரின் ஒப்புதல் கிடைக்கப்பெற்றுள்ளது. குறித்த சட்டமூலத்தை வர்த்தமானியில் வெளியிடுவதற்கும், பின்னர் பாராளுமன்ற அங்கீகாரத்திற்காக சமர்ப்பிப்பதற்காகவும் நீதி சிறைச்சாலை அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**09. களனி பௌத்த பெண்கள் அறக்கட்டளை நிலையம் (தாபித்தல்) சட்டமூலம்**

களனி பௌத்த பெண்கள் அறக்கட்டளை நிலையம் சட்டமூலம் கௌரவ பாராளுமன்ற உறுப்பினர் (வண) அத்துரலிய ரத்ன தேரர் அவர்கள் பாராளுமன்ற தனிப்பட்ட உறுப்பினர் சட்டமூலமாக சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. சட்டவரைஞரால் தயாரிக்கப்பட்டுள்ள அடிப்படைச் சட்டமூலத்திற்கு சட்டமா அதிபரின் ஒப்புதல் கிடைக்கப் பெற்றுள்ளது. பாராளுமன்ற நிலையியல் கட்டளைகள் 52(6) இன் ஏற்பாடுகளுக்கமைய குறித்த சட்டமூலத்தை விதந்துரைத்து பாராளுமன்றத்திற்கு அறிக்கை சமர்ப்பிப்பதற்காக புத்தசாசன, சமய மற்றும் கலாச்சார அலுவல்கள் அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**10. சர்வதேச தேரவாத அறநிலையம் (தாபித்தல்) சட்டமூலம்**

சர்வதேச தேரவாத அறநிலையம் (தாபித்தல்) சட்டமூலம் தனிப்பட்ட உறுப்பினர் பிரேரணையாக முன்னாள் ஜனாதிபதியும் தற்போதைய பாராளுமன்ற உறுப்பினருமான கௌரவ மைத்திரிபால சிறிசேன அவர்கள் சமர்ப்பித்துள்ளார். குறித்த சட்டமூலம் சட்டவரைஞரால் முறைசார்ந்த வகையில் தயாரிக்கப்பட்டுள்ளதுடன், அதற்கு சட்டமா அதிபரின் ஒப்புதலும் கிடைக்கப்பெற்றுள்ளது. பாராளுமன்ற நிலையியல் கட்டளைகள் 52(6) இன் ஏற்பாடுகளுக்கமைய குறித்த சட்டமூலத்தை விதந்துரைத்து பாராளுமன்றத்திற்கு அறிக்கை சமர்ப்பிப்பதற்காக புத்தசாசன, சமய மற்றும் கலாச்சார அலுவல்கள் அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

*****

**தமிழ், ஆங்கில மொழிபெயர்ப்புக்களுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள மொழியே மூலமாக அமையும்.**